கூடாது என்றும் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் வெளியிலே போய் இருக்கக்கூடும். இல்லையானால் அந்த ரிமாண்டு காலம் முடிவுற்ற உடனே, இயற்கையாகவே அவர்கள் வெளியிலே போய் விடுவார்கள்.

4. அறிவிப்புகள்

(அ) பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு 12 சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறை வேற்றப்பட உள்ளதால், பேரவை மாலையிலும் கூடும். காலை நிகழ்ச்சிகள் 1-30 மணிக்கு முடிவுற்று பேரவையின் மாலை நிகழ்ச்சிகள் மாலை 4-00 மணிக்கு கூடும்.

3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

(இ) சைதை பகுதி தனியார் தெருக்களிலுள்ள கழிவு நீரை அகற்றுதல் குறித்து.

*திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சைதை பகுதியில் உள்ள தனியார் தெருக்களில் அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டுமென்று பிறப்பிக்கப்பட்ட அரசாணைப்படி, சைதை பகுதியின் பாதி தெருக்களுக்கு மேலாக பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்றும் மீதமுள்ள தாழ்வான பகுதிகளில் உள்ள தனியார் தெருக்களில் கழிவுநீர் அகற்றும் வசதி மேற்கொள்ளப்படாததால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

1987 நவம்பர் 17] [திரு. க. இராசாராம்]

அறிக்கை.

சென்னை நகரில் தனியார் தெருக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க தமிழ்நாடு அரசு ஆணை எண். 541, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20—4—1986-ல் ரூ. 430.00 இலட்சத்திற்கு ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அடிப்படை வசதிகளில் ஒன்றான பாதாள சாக்கடை வசதிகள் அமைக்க, அரசு ஆணை எண். 949, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12—8—1986-ல் சென்னை மாநகராட்சியை ரூ. 100.00 இலட்சங்கள் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு கொடுக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

2. தனியார் தெருக்களில், ஏற்கனவே அருகில் இருக்கும் கழிவுநீர் அமைப்புகளுடன் இணைக்க சாத்தியக்கூறு உள்ள 125 தெருக்களில் ரூ. 94.93 இலட்சம் செலவில் இந்த ஆண்டு 1987-88 கழிவுநீர் குழாய்கள் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ள திட்டம் தீட்டப்பட்டு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் 43 தெருக்கள் சைதை தொகுதியில் அடங்கும். இவற்றிற்கு செலவிட திட்ட மதிப்பீடு ரூ. 30,46,700 ஆகும்.

3. சைதை தொகுதியில் 33 தெருக்கள் தாழ்வாக இருப்பதாலோ அல்லது வேறு காரணங்களினாலோ அருகிலுள்ள கழிவுநீர் அமைப்புடன் உடனடியாக நேரடியாக இணைக்க இயலாது. இவற்றிற்கு கழிவு நீரகற்று வசதி அமைக்க பொருத்தமான ஒரு வடிவு அமைப்பு செய்யப்பட்டு உரிய காலத்தில் கழிவுநீர் அகற்றும் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல 33 தெருக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்யலாம் என்று வாரியத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு, "Feasibility and non-feasibility" என்று சொல்லி, 33 தெருக்கள் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கின்றன. எடுத்துக் கொள்ளப்படாத தெருக்களுக்கு ஒரு வடிவமைப்பு செய்யப்பட்டு, உரிய காலத்தில் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அந்த உரிய வடிவமைப்பு எவ்வளவு நாட்களுக்குள் எடுக்கப்படும்? அந்தப் பணியை விரைந்து செய்து முடித்தால்,

[திரு. சைதை சா. துரைசாமி] [1987 நவம்பர் 17

இந்தத் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு மிகவும் பெருமை சேர்ப்பதாக இருக்கும். எனவே அந்த உரிய காலத்தினை, மிக விரைவாக முடிக்க அல்லது அதற்கென்று ஒரு தனிப் பொறியாளரை நியமித்து, இந்த வடிவமைப்பு சம்பந்தப்பட்ட பணிகளைத் தொடங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவருடைய சைதை தொகுதியில் 43 தெருக்களுக்கு ரூ. 30,46,700 செலவிலே திட்டம் மதிப்பிடப் பட்டு, தற்போது வேலைகள் எல்லாம் நடந்துகொண்டிருக் கின்றன. 33 தெருக்கள் தாழ்வாக, அல்லது மற்ற காரணங்களால் நேரடியாக இணைக்க இயலாத தன்மையில் இருக்கின்றன. ஆகவே கழிவு நீரகற்று வசதி அமைக்க பொருத்தமான ஒரு வடிவமைப்பு செய்ய தற்போது குடிநீர் வடிகால் வாரியம் முயன்று வருகிறது. அந்தப் பணிகள் விரைவிலே மேற்கொள்ளப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், விரைவில் என்பதற்கு ஒரு கால நிர்ணயம் செய்து அறிவித்தால், அந்தப் பணி துவங்க ஏதுவாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கால நிர்ணயம் செய்து அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி சென்னை நகர சுற்றுப் புறத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பணி போக்குவரத்து மத்தியிலும், மற்றவைகளுக்கு மத்தியிலும் மிகுந்த சிரமத்தோடு இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. ஆகவே கால நிர்ணயம் பற்றி உடனடியாகச் சொல் வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு இன்னும் வடிவமைப்பு அமைக்கப்படாமல் இருக்கின்றது. வடிவமைப்பு அமைத்த வுடனேயே எவ்வளவு காலம் என்பது இந்த அவையின் முன் தெரிவிக்கப்படும்.